


சிங்கம்புணரி ஜனனி ஸ்டோர் எஸ்.ஜெயராஜ் இல்லத் திருமண விழாவில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் பேரூராட்சி தலைவர் அம்பலமுத்து, ஒன்றியச் செயலாளர் பூமிநாதன், துணைச் செயலாளர்கள் சிவபுரி சேகர், முத்துக்குமார், பொருளாளர் பாஸ்கரன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் ஆர். புகழேந்தி, பேரூர்க் கழகச் செயலாளர் கதிர்வேல், அவைத்தலைவர் சிவக்குமார், பொருளாளர் செந்தில் கிருஷ்ணன், துணைத் தலைவர் இந்தியன் செந்தில், ஐ.பி.சாஜி சையது, பரிஞ்சி சரவணன், அழகுராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.



ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜனை, அவரது இல்லத்தில் தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன் சந்தித்து நன்றி தெரிவித்தார். உடன் இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் செஞ்சுரி செல்வம், விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர் சேது ராஜா, மாணவரணி மாவட்ட அமைப்பாளர் பிரகாஷ்,பேரூர் செயலாளர் சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### இஸ்லாமிய மக்களின் பல கோரிக்கைகளை தொடர்ந்து நிறைவேற்றி வருவதற்காக

# மஸ்ஜிதுகளின் ஐக்கிய ஜமா அத் அமைப்பு - முதல்வருக்கு நன்றி!

## அமைச்சர் செஞ்சி மஸ்தானுடன் சென்று நேரில் சந்தித்தனர்!

**சென்னை, ஜூன் 14-**

**இஸ்லாமிய சமுதாய மக்களின் பல்வேறு கோரிக்கைகளை தொடர்ந்து நிறைவேற்றி வருவதற்காக தமிழ்நாடு மஸ்ஜிதுகளின் ஐக்கிய ஜமா அத் கூட்டமைப்பு நிர்வாகிகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.6.2024) முகாம் அலுவலகத்தில், தமிழக மஸ்ஜிதுகளின் ஐக்கிய ஜமா அத் கூட்டமைப்பு தலைவர் எம். முஹம்மது பஷீர், செயலாளர் எஸ். முஹம்மது பெய்க், பொருளாளர் எஸ்.ஏ. லியாகத் அலி, துணை செயலாளர் எம். ஆரிப் சுல்தான் மற்றும் சென்னை மாவட்ட நிர்வாகிகள் ஏ.காசிம் முஸ்தபா, ஆர். முஹம்மது பாரூக், யு. ஹனீபா ஆகியோர் சந்தித்து, இஸ்லாமிய சமுதாய மக்களின் பல்வேறு கோரிக்கைகளை தொடர்ந்து நிறைவேற்றி வருவதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

சமுதாயத்தில் அனைத்துத் தரப்பு மக்களது தேவைகளும் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயல்பட்டு வரும் திராவிட மாடல் அரசு, சிறுபான்மையினரின் நலனை பாதுகாப்பதிலும், மேம்படுத்துவதிலும் முன்னோடியாக விளங்கி வருகிறது. முஸ்லிம் சமுதாய மக்களுக்கு உரிய வாய்ப்பை வழங்குவதன் மூலமும், அவர்களின் சட்டப் பூர்வ உரிமைகளை உறுதி செய்து, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலமும் சிறுபான்மையினரின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 9.1.2024 அன்று கிறிஸ்துவ சமுதாயத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளுடனும், 17.2.2024 அன்று இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளுடனும் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டு, அவர்களது கோரிக்கைகள் கேட்டறியப்பட்டது.

அக்கூட்டங்களில் தெரிவிக்கப்பட்ட கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு அவற்றை நிறைவேற்ற ஆணைகள் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன. அந்த வகையில் சிறுபான்மையின மக்களின் வழிபாட்டுத் தலங்களான கிறிஸ்தவர்களின் தேவாலயங்கள், இஸ்லாமியர்களின் மசூதிகள் ஆகியவற்றை புதிதாக கட்டுவதற்கும் ஏற்கனவே உள்ள வழிபாட்டுத் தலங்களை புனரமைப்பதற்கும் அரசு அனுமதி வழங்குவதில் இருந்து வந்த நடைமுறை சிக்கல்களை நீக்கி, எளிமையாக்கி இதற்கான ஆணைகள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசால் வெளியிடப்பட்டதற்கு இச்சமுதாய மக்கள் தங்களது நன்றியினை தெரிவித்து வருகின்றனர்.

அதன்படி, தமிழக மஸ்ஜிதுகளின்ஐக்கியஜமாஅத்கூட்டமைப்பின் தலைவர் எம். முஹம்மது பஷீர் மற்றும் நிர்வாகிகள் நேற்றையதினம் முதலமைச்சர் அவர்களை முகாம் அலுவலகத்தில் சந்தித்து தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்வின்போது, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் உடனிருந்தார்.

### மாநிலங்களவையில்

# பா.ஜ.க.வால் எந்த மசோதாவும் நிறைவேற்ற முடியாது!

## ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் எச்சரிக்கை!

கடப்பா, ஜூன் 14 -

கடப்பாவில் செய்தியாளர்களிடம் பேசிய ஒய். எஸ்.ஆர் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் விஜயசாய் ரெட்டி, மாநிலங்களவையில் ஒய்.எஸ்.ஆர் காங்கிரஸ் கட்சிக்கு 11 எம்.பி.க்கள் உள்ள நிலையில், மசோதாக்களை நிறைவேற்ற எங்களின் ஆதரவு தேவை என்பதை ஒன்றிய பா.ஜ.க. அரசு மறந்துவிடக்கூடாது என்று கூறினார்.

பொதுசிவில் சட்டத்தை எதிர்ப்பதாக ஏற்கனவே தெரிவித்து விட்டதாகவும், ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டம் குறித்த நிலைப்பாட்டை தற்போது வரை எடுக்கவில்லை என்று கூறினார். தெலுங்கு தேசம் கட்சிக்கு மாநிலங்களவையில் ஒரு உறுப்பினர் கூட இல்லை என்பதை பிரதமர் மோடி நினைவில் கொள்ள வேண்டும் என்றும் ஒய். எஸ்.ஆர் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்றத் தலைவர் வி.விஜயசாய் ரெட்டி தெரிவித்தார்.


தி.மு.க. இளைஞர் அணி



கலைஞர் செய்திகள்

கலைஞர் 100 1924 - 2023

இணைந்து நடத்தும்




# என் உயிரினும் மேலான..!

## கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி

சமூகநீதி, பகுத்தறிவு, சுயமரியாதை, மாநில சுயாட்சி, மொழியுரிமை போன்ற திராவிட இயக்கக் கொள்கைகளில் பற்றும் ஆர்வமும் கொண்டவரா நீங்கள்?

திராவிட இயக்கத்தின் கொள்கைகளைப் பரப்புவதன் மூலம் சமூக மாற்றங்களைச் சாதிக்க முடியும் என்று எண்ணுபவரா நீங்கள்?

பேச்சாற்றல் மூலம் மற்றவர்களைக் கவரக்கூடியவரா நீங்கள்? உங்களுக்காகத்தான் இந்தக் களம்!

கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியும் கலைஞர் தொலைக்காட்சியும் இணைந்து நடத்தும் **'என் உயிரினும் மேலான'** பேச்சுப் போட்டி உங்களுக்கான வாசலைத் திறக்கிறது. நீங்கள் செய்யவேண்டியது எல்லாம் ஒன்றே ஒன்றுதான். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை அன்பகம், 614, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018 என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

மேலும் www.kalaignar100pechu.org என்ற இணையதளத்தில் உள்ள 'விண்ணப்பம்' பகுதியில் உங்கள் விவரங்களைத் தந்து பதிவு செய்துகொள்ள வேண்டும். உங்கள் மாவட்டத்தில் நடைபெறும் முதல்கட்டத் தேர்வில் கலந்துகொள்ள உங்களுக்கு அழைப்பு விடுக்கப்படும். **விண்ணப்பிக்க கடைசி நாள் : 15.07.2024.**

முதல்கட்டத் தேர்வில் கலந்துகொண்டவர்களில் சிறப்பாகப் பேசியவர்களைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு மண்டலம் தோறும் நிகழ்ச்சி நடைபெறும். இந்த இரண்டாம் கட்ட நிகழ்ச்சியில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்டு நடைபெறும் இறுதிக்கட்ட நிகழ்ச்சியில் மிகச்சிறப்பாகப் பேசிய முதல் மூன்று நபர்களுக்குப் பரிசுகள் வழங்கப் படும்.

**'என் உயிரினும் மேலான'** நிகழ்ச்சி கலைஞர் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும்.

**முதல் பரிசு ரூ.1,00,000**
**இரண்டாம் பரிசு ரூ.75,000**
**மூன்றாம் பரிசு ரூ.50,000**

### பேச்சுப்போட்டித் தலைப்புகள்

- என்றென்றும் பெரியார். ஏன்?
- அண்ணா கண்ட மாநில சுயாட்சி
- கலைஞரின் தொலைநோக்குப் பார்வை
- மானமிகு சுயமரியாதைக்காரர் கலைஞர்
- கலைஞர் - நவீன தமிழ்நாட்டின் சிற்பி
- இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்
- சமூக நீதிக் காவலர் கலைஞர்
- தமிழ்நாட்டு குடும்பங்களில் தி.மு.க.
- பேசி வென்ற இயக்கம்
- திராவிட மாடல் நாயகர் முதல்வர் மு.க. ஸ்டாலின்

### விதிமுறைகள்

● 18 முதல் 35 வயது வரையுள்ளவர்கள் போட்டியில் கலந்துகொள்ளலாம். ● போட்டி நடைபெறும் நாள், இடம் போன்ற விவரங்கள் முன்பதிவு செய்துகொண்டவர்களுக்குத் தெரிவிக்கப்படும் ● பேச்சுத் திறன் அடிப்படையில் சிறந்த பேச்சாளர்களை, மூன்று நடுவர்கள் தேர்வு செய்வார்கள். ● நீங்கள் பேச வேண்டிய தலைப்பு உங்களுக்குத் தெரிவிக்கப்படும். தலைப்பை மையமாக வைத்தே உங்கள் உரை அமைய வேண்டும். ● தனிநபர் தாக்குதல், ஆதாரமற்ற தகவல்கள், நாகரீகமற்றச் சொற்களுக்கு அனுமதியில்லை. ● படிக்கும் இடத்தில், பணிபுரியும் இடத்தில் தந்துள்ள அடையாள அட்டையை அணிந்திருப்பது அவசியம். ● போட்டியில் கலந்துகொள்பவர்கள் திராவிட இயக்கக் கொள்கைகளை ஏற்றுக்கொள்பவர்களாக இருப்பது அவசியம். ● நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. ● கலந்து கொள்பவர்கள் அனைவருக்கும் நினைவுப் பரிசு வழங்கப்படும்

### விண்ணப்பம்

| | |
|---|---|
| பெயர் | மின்னஞ்சல் |
| முகவரி | மாவட்டம் |
| மாநிலம் | நாடு |
| அஞ்சல் குறியீடு | கைபேசி எண் |
| பாலினம் | பிறந்த தேதி |

**உரக்கப் பேச, உடன்பிறப்புகளே வருக!**